பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

07 06 2026 SUNDAY 630 PM

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஐ.நா-வின் அமைதிப்படைக்கு இந்தியா தொடர்ந்து பங்களித்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. மின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

3. புதிய முதலீடுகளை ஈர்க்க முடியாவிட்டாலும் கூட, ஏற்கனவே உள்ள முதலீடுகளையாவது தக்க வைக்க த.வெ.க. அரசு முயற்சிக்க வேண்டும் என்று அஇஅதிமுக வலியுறுத்தியுள்ளது.

4. டாஸ்மாக் மதுபானக் கடைகள் மூடப்படும் இடங்களில் தனியார் மதுபானக் கூடங்கள் திறக்கப்படுவதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

5. Ulaanbaatar ஓப்பன் மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று இரண்டு தங்கம், 4 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

>>>>><<<<<

ஐ.நா-வின் அமைதிப்படைக்கு இந்தியா தொடர்ந்து பங்களித்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

ஐ.நாவின் சிறந்த ராணுவ விருது மேஜர் Abhilasha Barak-க்கிற்கு வழங்கப்பட்டதை அடுத்து அவருக்கு வாழ்த்து தெரிவித்து வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் பிரதமர் இதனை தெரிவித்துள்ளார்.

ஐ.நா. அமைதிப்படையில் பணியாற்றி வரும் மேஜர் Abhilasha Barak-க்கிற்கு கிடைத்த மிகப் பெரிய அங்கீகாரம் இது என்று அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விருது, இந்தியாவில் உள்ள பெண் குழந்தைகளுக்கு உத்வேகம் அளிக்கும் என்றும் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

மின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளில் தமிழக அரசு ஈடுபட்டுள்ளதாக மின்வாரியத் தலைவர் திரு. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

இன்று திருவண்ணாமலையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மின்பகிர்மானத்தில் ஏற்படும் பிரச்சினைகள் காரணமாகத்தான் மின்தடை ஏற்படுவதாக குறிப்பிட்டார்.

இதனை சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

மின்துறையில் காலியாக உள்ள பணியிடங்களை பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை த.வெ.க. அரசு மேற்கொண்டிருப்பதாகவும் திரு. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

>>>>><<<<<

இதற்கிடையே, தமிழகம் முழுவதும் அறிவிக்கப்பட்டாத மின்வெட்டு நிலவுவதாகவும், இதனால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தேமுதிமுக பொதுச்செயலாளர் திருமதி. பிரேமலதா விஜயகாந்த் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமல் பகல் மற்றும் இரவு நேரங்களில் பல மணி நேரம் மின்சாரம் துண்டிக்கப்படுவதாக குறை கூறியுள்ளார்.

பராமரிப்பு பணிகள் மற்றும் பிற காரணங்களுக்காக மின்சாரம் துண்டிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டாலும், குறைந்தபட்சம் அதுபற்றிய தகவல்களை பொதுமக்களுக்கு முன்கூட்டியே தெரிவிக்க வேண்டும் என்றும் திருமதி. பிரேமலதா விஜயகாந்த், மாநில அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>><<<<<

தமிழகத்தில் புதிய முதலீடுகளை ஈர்க்க முடியாவிட்டாலும் கூட, ஏற்கனவே உள்ள முதலீடுகளையாவது தக்க வைக்க த.வெ.க. அரசு முயற்சிக்க வேண்டும் என்று அஇஅதிமுக வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சி சமூகவலைதளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில், தொழில்புரிவதற்காக தமிழக அரசுடன் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டிருந்த ஒரு நிறுவனம், ஆந்திர மாநிலத்திற்கு செல்வதாக வெளியான செய்திகளை சுட்டிக்காட்டியுள்ளது.

எதிர்க்கட்சி சட்டப்பேரவை உறுப்பினர்களை குதிரைபேரத்தில் இழுத்த த.வெ.க. அரசு, அதில் காட்டிய வேகத்தை இதில் காட்டவில்லை என்றும் அஇஅதிமுக அந்த அறிக்கையில் குற்றம் சாட்டியுள்ளது.

>>>>><<<<<

திருப்பரங்குன்றம் தீபத் தூணில் தீபம் ஏற்ற வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்ட போதிலும், அதனை அனுமதிக்க மாட்டோம் என்று கூறுவது ஆணவத்தின் வெளிப்பாடு என்று பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரான திருமதி. தமிழிசை சௌந்தராஜன் கூறியுள்ளார்.

மதுரையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்களின் உணர்வுகளை மதிக்காமல் செயல்பட்டதன் காரணமாகத் தான் திமுக ஆட்சியை இழந்ததாக கூறினார்.

மின்வாரியத்தில் வன்பொருள் காணாமல் போன விவகாரத்தில், ஊழலை மறைக்கும் வகையில் த.வெ.க. அரசு செயல்படுவதாக அவர் குற்றம் சாட்டினார்.

டாஸ்மாக் மதுபானக் கடைகள் மூடப்படும் இடங்களில் தனியார் மதுபானக் கூடங்கள் திறக்கப்படுவதாகவும் திருமதி. தமிழிசை சௌந்தரராஜன் குற்றம் சாட்டினார்.

>>>>><<<<<

திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்றுவது தொடர்பான விவகாரத்தில், முந்தைய நடைமுறையே தொடரும் என்று மாநில அமைச்சர் திரு. நிர்மல்குமார் கூறியிருப்பது வரவேற்கத்தக்கது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. வீரபாண்டியன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், வருங்காலத்திலும் இந்த உறுதிப்பாட்டோடு த.வெ.க. அரசு செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

>>>>><<<<<

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 7 நாட்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

நீலகிரி, திருப்பூர், திண்டுக்கல், தேனி, கன்னியாகுமரி, ஈரோடு, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, மதுரை, விருதுநகர், தென்காசி, திருநெல்வேலி மற்றும் கோவை மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

சேலத்தில் நூற்றுக்கணக்கான பரதக் கலைஞர்கள் சிவதாண்டவ நடனம் ஆடினர். சிறுகுழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை இதில் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

சிவதாண்டவ நிகழ்ச்சியில் நடனமாடியது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று இதில் பங்கேற்றவர்கள் தெரிவித்தனர்.

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

ராணிப்பேட்டை மாவட்டம், கலவை அருகே மாம்பாக்கத்தில் உள்ள ஸ்ரீதேவி கருமாரி அம்மன் ஆலய கும்பாபிஷேக விழா இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

>>>>><<<<<

நெல்லை சரக DIG-யாக திரு. திருநாவுக்கரசு இன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

>>>>><<<<<

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சாமந்திப் பூ உற்பத்தி அதிகரித்துள்ளது.

>>>>><<<<<

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மகளிர் மேம்பாட்டிற்காக சிறப்பாக பணியாற்றியவர்களுக்கான விருதுக்கு தகுதியுள்ளவர்கள் வரும் 19ஆம் தேதிக்குள் அதற்கான மாநில அரசின் இணையதளத்தில் விண்ணப்பிக்குமாறு ஆட்சியர் திருமதி. சினேகா கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>><<<<<

வேலூர் மாவட்டம் குடியாத்தம் அருகே வன விலங்குகளை வேட்டையாடச் சென்ற இருவரை காவல்துறையினர் கைது செய்தனர்.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

Ulaanbaatar ஓப்பன் மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று இரண்டு தங்கம், 4 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

ஆடவர் 61 கிலோ எடைப்பிரிவில், Deepakக்கும், 125 கிலோ எடைப்பிரிவில் தினேஷ்-ம் தங்கப்பதக்கம் வென்றனர்.

ஆடவர் 57 கிலோ எடைப்பிரிவில் சுமித்-ம், 65 கிலோ எடைப்பிரிவில் மோஹித் குமாரும், 74 கிலோ எடைப்பிரிவில் ஜெய்தீப்பும், 97 கிலோ எடைப்பிரிவில் விக்கி-யும் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

>>>>><<<<<

சீன தைபே ஓப்பன் தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், இரண்டு வெள்ளிப்பதக்கம் வென்றது.

மகளிர் நீளம் தாண்டுதலில் Shaili Singh தங்கப்பதக்கத்தையும், ஆடவர் 110 மீட்டர் தடை ஓட்டப்பிரிவில் Tejas Shirse வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

ஆடவர் 200 மீட்டர் ஓட்டத்தில் Animesh-க்கு வெள்ளிப்பதக்கம் கிடைத்தது.

>>>>><<<<<

23 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய படகு சாம்பியன் போட்டியில், இந்தியா 2 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

கஜகஸ்தானில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 500 மீட்டர் பிரிவில், Gyaneshwor Singh வெண்கலப்பதக்கம் வென்றார்.

கலப்பு இரட்டையர் 500 மீட்டர் பிரிவில் Arvind Verma – Neha Devi இணை வெண்கலப்பதக்கம் வென்றது.

>>>>><<<<<

ஜப்பானில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் செஸ் போட்டியில் இந்தியாவின் வைசாலி பட்டம் வென்றார்.

இறுதிப்போட்டியில் அவர், கஜகஸ்தானின் Alua Nurman-ஐ வென்றார்.

>>>>>END<<<<<